விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–03.30 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –04.05 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : DVC.1/2024**

**Prosecution witness : ம.சா.1** **Date : 13.09.2024**

| | |
|---|---|
| Name : நந்தினி | Taluk : மேட்டூர் |
| Husband Name : நல்லதம்பி | Calling : – |
| Village : தாணாபதியூர் | Age : 23 |

(Complainant and respondent present )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயக்கப்பட்டு திருமணம் என்றால் சரிதான். திருமணம் செலவுகள் அனைத்தும் என்னுடைய குடும்பமும் எதிரர்மனுதாரர் குடும்பமும் பாதியாக பிரித்துக்கொண்டோம் என்றால் இல்லை. முழுச்செலவுகள் என் குடும்பம் செய்தது. திருமணத்தின் போது தாலி கொடி தங்கத்தில் போட்டார்களா என்றால் இல்லை. கயிற்றில் தான் போடப்பட்டது. திருமணத்திற்கு முன்பு மாப்பிள்ளை வீட்டார் எத்தனை பவுன் தாலி கொடி போடப்படுகிறது என்று எதிர்மனுதாரரை கேட்டோமா என்றால் இல்லை. நாங்கள் தங்கத்தில் தாலி கொடி பொடுகிறோம் என்று எதாவது பேசினோமா என்றால் இல்லை. திருமணம் கோயில் நடைபெறும் போது எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்றால் 80 பேர். அந்த 80 பேருக்கு சாப்பாட்டு செலவு இருவீட்டாரும் சேர்ந்து தான் செய்தோம். திருமணத்தின் போது எனக்கு 8 பவுன் போட்டடார்கள். எதிர்மனுதாரருக்கு நாங்கள் 1 பவுன் போட்டோம். திருமணம் முடிந்து எங்கள் வீட்டிலிருந்து அழைப்புக்கு 15 பேர் வந்தார்கள். திருமணம் முடிந்த பிறகு 2 வாரத்திற்கு ஒரு முறை என்

பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்று உடனே அழைத்து வந்தாரர். 2 மாதங்கள் அவ்வாறு அழைத்து சென்று மீண்டும் அவரது வீட்டிற்கு அழைத்து செல்வார். 7, 8 மாதங்கள் நானும் எதிர்மனுதாரரும் மகிழ்ச்சியாக இருந்தோம் என்றால் இல்லை. அப்போதும் சண்டை போட்டுக்கொண்டுதான் இருந்தார். வளைகாப்பு நிகழ்ச்சி 7 மாதம் இருக்கும் போது நடத்தலாமா என்று எனது பெற்றோர் கேட்டதற்கு எதிர்மனுதாரரும் அவரது தாயாரும் வளைகாப்பு வேண்டாம் என்றும், உங்கள் மகளை எங்களுக்கு பிடிக்கவில்லை அதனால் அழைத்து செல்லுங்கள் என்று கூறினார்கள். அப்போது என் பெற்றோர்களை எதிர்மனுதாரரும் தாயாரும் அசிங்கமா பேசி மற்றும் என் கணவர் என் வயிற்று எட்டி உதைத்தார். என் அப்பா என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார். எதிர்மனுதாரர் வந்து என்னை பார்க்க கூட இல்லை. காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையிலேயே சம்பவம் நடைபெற்று இருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றால் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை ஆனால் ஊரில் பஞ்சாயத்து பேசி குழந்தை பிறந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டனர். என்னுடைய பெற்றோர் வீட்டிலிருக்கும்போது என்னுடைய கணவர் வீட்டார் 10, 15 நபர்கள் வந்து பொது இடத்தில் வைத்து என்னை மீண்டும் சேர்ந்து வாழ அழைத்தார்கள் என்றால் வளைகாப்பிற்கு பின்னர் யாரும் வந்து என்னை அழைக்கவில்லை. இந்த சம்பவத்திற்கு முன்னர் எனது கணவர் வீட்டார் நான் எனது பெற்றோர் வீட்டில் நான் கோவித்து கொண்டு வந்தபோது அவர்கள் ஊர் பெரியோர்களுடன் வந்து என்னை 2, 3 முறை வந்து அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

**<u>மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**